[1978 செப்டம்பர் 7

போக்குவரத்துக் கழகங்களில் முகவர்கள் நியமனம்

*வின 75—திரு. இரா. அமிர்தராஜ், திரு.எஸ்.ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு பஸ்களுக்குப் பேருந்து நிலையங்களில் ஏஜ்ஜண்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) மேலும் எத்தனைப் பேர் எத்தனை இடங்களுக்கு நியமிக்கப்பட இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) சில போக்குவரத்துக் கழகங்கள் அவைகளின் பேருந்துகளுக்குப் பேருந்து நிலையங்களில் ஏஜெண்டுகளை நியமித்துள்ளன.

(ஆ) மதுரைப் பேருந்து நிலையத்தில் கூடுதலாக ஒரு ஏஜெண்ட் நியமனம் செய்வதுப் பற்றி நிர்வாகத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, எவ்வளவு பேருந்து நிலையங்களுக்கு ஏஜெண்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? இதனால் போக்குவரத்துக்கு சௌகரியமாக இருக்கிறது. பிரயாணிகள் தங்கள் பிரயாணச் சீட்டுக்களை வாங்கிக்கொள்ள வாய்ப்பு வசதியாக இது இருக்கிறது. இதனால் போக்குவரத்துக் கழகங்களுக்கு அதிகம் இலாபம் கிடைக்க வழிவகை ஏற்படும்: இதே மாதிரி நெல்லை மாவட்டத்தில் ஓடுகின்ற அரசுப் பேருந்துகளில், எந்தெந்தப் பேருந்துகள் நிறைய செல்கின்றனவோ அந்தப் பேருந்து நிலையங்களில் ஏஜெண்டுகள் நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அவர்கள் கூறுகின்ற கருத்தின் அடிப்படையில் ஏற்கனவே நெல்லை மாவட்டத்தில் 16 இடங்களில் 26 ஏஜெண்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, மாநில அரசுப் போக்குவரத்து நிலையங்கள், 'ஏ' கிளாஸ் முனிசிபாலிட்டி உள்ள இடங்களில் ஏஜெண்டுகள் இல்லாத காரணத்தால் பயணிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே 'ஏ' கிளாஸ் முனிசிபாலிட்டிகளில், உதாரணமாக சிதம்பரத்திற்கு ஏஜெண்டு இல்லை என்பதை அரசு அறியுமா? அதற்கு ஆவன செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, எந்த நகராட்சிப் பகுதியில் இது தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டுவார்களேயானல் கண்டிப்பாக அதுப்பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

1978 செப்டம்பர் 7]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, அரசு பஸ் ஏஜெண்டுகள் செயல்படாத அளவில் தனியார் பஸ் நிறுவனத்தினர் கையூட்டு கொடுத்து அவர்களைச் செயல்பட விடாமல் தடுப்பது அரசுக்குத் தெரியுமா ? சில இடங்களில் அரசு பஸ் ஏஜெண்டுகளை தனியார் பஸ் உரிமையாளர்களுடைய இச்சைக்கு, அதாவது அவர்களுடைய செய்கைக்கு அடிமையாக இருப்பவர்களைக்கொண்டு அடிக்கிறார்கள், துன்புறுத்துகிறார்கள், இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூரில் அப்படி நடப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியதன் அடிப்படையில் இதுபற்றி அரசுக்குத் தகவல் வந்து, அது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டது. உறுப்பினர் கூறுகின்ற அளவிற்குக் குறைபாடு இல்லை என்றாலும் ஆங்காங்குள்ள சில தனியார் முதலாளிகளின் தவறுகளுக்கு அரசுப் பேருந்தைச் சேர்ந்தவர்கள் உடந்தையாக இல்லாமல் இருக்கும் அளவிற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் 16 இடங்களில் 26 ஏஜெண்டுகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். திருச்செந்தூர் தாலுக்காவில் எத்தனை பேருந்து நிலையங்களுக்கு எத்தனை ஏஜெண்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்படாத இடங்களில் எந்தக் கால கட்டத்தில் அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, திருச்செந்தூர் வட்டத்தில் எத்தனை இடங்களில் என்ற தகவல் இப்பொழுது இல்லை. அப்படி அங்கு இல்லை என்றால் தேவைகளின் அடிப்படையை ஆய்ந்து அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் அதிகமான பஸ்கள் ஓடுகின்றன. அங்கு எந்தெந்த ஊர்களில் ஏஜெண்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ? எந்த அடிப்படையில் ஏஜெண்டுகள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, தர்மபுரி-மாவட்டத்தில் அண்ணா போக்கு வரத்துக் கழகத்தின் சார்பில் புதிதாக 52 வழித்தடங்களில் அடுத்த மாத வாக்கில் பேருந்துகள் விடப்பட இருக்கின்றன. அவைகள் விடப்பட்ட பின்பாக ஏஜெண்டுகள் நியமிக்கப்படுவது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.